செய்தி வெளியீட்டு எண்.364 நாள் 30.04.2010

**<u>மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆவின் புதிய தயாரிப்பான "புரோபயோடிக் லஸ்ஸி" யை அறிமுகம் செய்து வைத்தார்</u>**

நுகர்வோர்களின் தேவையின் அடைப்படையில் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப புதிய பால் பொருட்களை தயாரித்து விற்பனை செய்துவரும் ஆவின் புதிய பால்பொருளான ''புரோபயோடிக் லஸ்ஸி'' யை தயாரித்துள்ளது. மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (30.4.2010) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ''புரோபயோடிக் லஸ்ஸி'' யை அறிமுகப்படுத்தினார். அதனை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன் அவர்களும் தலைமை செயலாளர் திரு கே.எஸ். ஸ்ரீபதி அவர்களும் பெற்றுக்கொண்டார்கள்.

புரோபயோடிக் நுண்ணுயிர்கள் மனித உடல் சார்ந்துள்ளதால் இந்த லஸ்ஸி அனைத்து வயதினருக்கும் முக்கியமாக ஜீரண மண்டல சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கும் ஏற்றதாகும். புரோபயோடிக் லஸ்ஸி உடல் நலத்திற்கு உகந்தது. சுலபமாக ஜீரணிக்கக்கூடியது, உடலில் எதிர்ப்பு சக்தியை கூட்டுகிறது, குடல் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுக்கிறது, சீதபேதி என்ற வயிறு சம்பந்தமான நோயைக்கட்டுப்படுத்துகிறது. தற்போது அறிமுகப்படுத்தியுள்ள ஆவின் புரோபயோடிக் லஸ்ஸியில் ஒவ்வொரு 100 கிராமிலும் 121 கிலோகலோரியும், 1.2 கிராம் கொழுப்புச்சத்தும், 3.9 கிராம் புரதச்சத்தும், 0.8 கிராம் தாதுச்சத்தும், 5.8 கிராம் மாவுச்சத்தும், 16.5 கிராம் சர்க்கரைச்சத்தும் உள்ளது. ஆவின் புரோபயோடிக் லஸ்ஸி 200 கிராம் கப்பின் விலை ரூ.15.00 மட்டும்.

மேலும், இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆவின் நிறுவனத்தில் தற்பொழுது செயல் அலுவலர்களாக பணிபுரியும் 29 பேர்களுக்கு துணை மேலாளர்களாக பதவி உயர்வு ஆணைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை, இணையத்தில் 86 பேருக்கும், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 44 பேருக்கும், பால்வளத்துறையில் 11 பேருக்கும் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பால்வளத்துறையில் 18 பேருக்கு புதியதாக பணி நியமன ஆணையும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியத்தில் பணிபுரியும் 172 பணியாளர்களுக்கும், பால்வளத்துறையில் பணிபுரியும் 48 பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிபிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் திரு சி.முத்துக்குமாரசாமி, பால்வளத்துறை ஆணையர்/ஆவின் நிர்வாக இயக்குநர் திரு அபூர்வவர்மா, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.